**யட்டவத்த பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து யட்டவத்த பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா. 704,136 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்கின்றேன். |
| (ஆ) | அபிவிருத்தித் திட்டங்களுக்காகச் செலவிட்ட ரூபா. 1,300,245 மூலதனமாக் கப்பட்டிருக்கவில்லை. | மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்கின்றேன். |
| (இ) | 15 பேர்ச் விஸ்தீரணமான காணியின் பெறுமதியாகிய ரூபா. 100,000 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ரூபா. 535,000 பெறுமதியான நீர் பவுஸரின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்கின்றேன். |
| (உ) | பமுனுதெனிய உப வீதி அபிவிருத்திக்காக சலகம விவசாய அமைப்புக்கு செலுத்த வேண்டிய ரூபா. 200,000 கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்கின்றேன். |
| (ஊ) | ரூபா. 343,274 செலவில் முடிக்கப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா. 313,274 என கணக்கிடப்பட்டதை திருத்துவதற்காக மீளாய்வாண்டில் ரூபா. 313,274 கட்டிடக் கணக்கிற்கு மீண்டும் வரவு வைத்ததன் காரணமாக கட்டிடங்களின் பெறுமதி ரூபா. 283,274 கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்கின்றேன். |
| (எ) | மக்கள் வங்கியில் பேணப்பட்டு வருகின்ற ஒரு நிலையான வைப்புக் கணக்கு தொடர்பாக கிடைக்க வேண்டிய வட்டி ரூபா. 127,181 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கிடப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்கின்றேன். |

**1.3.2 இணங்காத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா. 54,752,805 மொத்தமான 09 கணக்கு விடயங்களுடன் தொடர்பான மீதி மற்றும் அவற்றுடன் தொடர்பான துணை ஏடுகள் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளுக்கு இடையே வேறுபாடுகளின் கூட்டுத்தொகை ரூபா. 5,949,856 ஆகவிருந்தது. | கணக்கு மீதிகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் தீர்க்கக்கூடிய கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பதற்கும், துணை ஏடுகளை சீர் செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| 1 வருடத்திற்கு மேற்பட்ட 5 வருடங்களுக்குக் குறைவான ரூபா. 2,460,256 மற்றும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா. 31,960 கிடைக்க வேண்டிய மீதிகள் காணப்பட்டன. | நிலுவை வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவை வருமானத்தினை அறவிடுவதற்கும் நீண்ட கால நிலுவை மீதிகளை பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| 1 வருடத்திற்கு மேற்பட்ட 5 வருடங்களுக்குக் குறைவான ரூபா. 5,166,910 மற்றும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா. 86,390 மீதிகளில் 2020 மே 14 ஆம் திகதி வரை ரூபா. 38,676 மேலும் செலுத்த வேண்டியிருந்தது. | தீர்க்கப்பட வேண்டிய கணக்கு மீதிகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.4 கணக்காய்வு தொடர்பான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

**தகவல்களை சமர்ப்பிக்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா. 63,891,876 பெறுமதியான 3 கணக்கு விடயங்களுக்கான மெய்மயாய்வு அறிக்கை மற்றும் அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | மெய்மயாய்வு அறிக்கை மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சரியான அறிக்கை மற்றும் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவு | சபைக்குரிய வீதிகள் உள்ளடக்கப்பட்ட பதிவேடு பேணப் பட்டிருக்கவில்லை. | பதிவேகள் நாளதுவரையாக்க ப்பட வேண்டும். | பதிவேகள் நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | 9 சந்தர்ப்பங் களுக்குரிய ரூபா 192,339 தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கபட்டிருந்தன | விடுவிக்க கூடிய வைப்புக்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,013,361 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,675,629 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் குத்துகையும் | 1,323,000 | 1,227,578 | 1,046,675 | 181,000 | 1,087,000 | 1,398,987 | 1,272,854 | 199,501 |
| (ii) | வாடகை | 235,000 | 215,050 | 215,050 | - | 1,221,000 | - | 1,020,275 | - |
| (iii) | அனுமதிப்பத் திரக்கட்டணங்கள் | 1,075,000 | 911,150 | 911,150 | - | 915,060 | - | 1,039,458 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,000,000 | 1,380,900 | 1,380,900 | - | 5,840,300 | - | 3,274,945 | - |
| | | 3,633,000 | 3,734,678 | 3,553,775 | 181,000 | 9,063,360 | 1,398,987 | 6,607,532 | 199,501 |

**2.2.2 ஏக்கர் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா. 31,960 ஏக்கர் வரி அறவிடப்பட வேண்டியிருந்தது. | அறவிடுவதற்கான சாத்தியப்பாட்டினை கருத்திற்கொள்ள வேண்டும். | நீக்கிவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.3 நீர்க் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டு நீர்த் தேக்கங்களுடன் தொடர்பான 129 நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து 2010 மற்றும் 2017 ஆகிய வருடங்களிலிருந்து நிலுவையாகக் காணப்பட்ட நீர்க் கட்டணம் ரூபா. 98,180 அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த தொகை அறவிடப்பட வேண்டும். | பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா. 1,993,189 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 2,667,906 ஆகவிருந்ததுடன், 2020 மே 12 ஆம் திகதியன்று முறையே ரூபா 1,831,188 மற்றும் ரூபா 783,500 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | பெற வேண்டிய வருமானம் அறவிடப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகஅறிய தருகின்றேன். |

### 2.2.5 மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்ட விதிகளுக்கமைய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக முன்னைய ஆண்டுகளில் விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளுக்கமைய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா. 32,259 மிகை அறவீட்டு தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதுவரை அறவிடப்படவில்லை என்பதை குறிப்பிடுகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 3 உப விதிகள் இயற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | தேவையான உப விதிகளை இயற்றுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உப விதிகளை இயற்றுவதற்கான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுப்பேன். |

**(ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கழிவு அகற்றப்படும் இடத்தினை பிரதேச சபைக்கு சொந்தமாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், கழிவுத் திட்டத்திற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதேவேளை உக்கக்கூடிய கழிவுகளைப் பயன்படுத்தி அசேதனப் பசளை தயாரித்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த இடத்தை சொந்தமாக்கிக் கொண்டு சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், உக்கலடையாத கழிவுகளை விற்பனை செய்வதற்கும் மீள் சுழற்சி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | கழிவு அகற்றும் இடத்தை சொந்தமாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், அதுவரை சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற முடியாது என்பதை குறிப்பிடுகிறேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் NP/SP/SDG/17 இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல் | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கங்களை அடைவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியாதிருந்தது. |

தொடர்பான முறையான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறிருக்கையில் வரவு செலவு அறிக்கையில் நிலையான அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக ரூபா. 386,000 ஒதுக்கப்பட்டு அதில் ரூபா. 191,714 செலவு செய்யப்பட்டிருந்ததுடன், இதன் கீழ் ரூபா. 145,000 ஒதுக்கப்பட்டிருந்த 4 திட்டங்களுக்கான நிதிஏற்பாடு முழுமையாக எஞ்சியிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த 4 வருடங்களினுள் கட்டிட அனுமதிப்பத்திரங்களுக்காக 398 அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதும், 37 இணக்கச் சான்றிதழ்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. | இணக்கச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இணக்கச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளுமாறு அனைத்து விண்ணப்பதாரிகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் அனுமதிக்கப்பட்ட 07 பதவிகளுடன் தொடர்பான 11 வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவி வெற்றிடங்களை பூரணப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உள்ளூராட்சி திணைக்களம் மற்றும் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு இது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

## 3.4 செயற்பாட்டு வினைத்திரனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கழிவுகளை ஒதுக்கி வைப்பதற்காக பகிர்ந்தளிப்பதற்காக ரூபா. 34,510 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 109 கழிவுத் தொட்டிகள் பகிர்ந்தளிக்கப்படாது 2020 மே 12 ஆம் திகதி வரை சபை வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தன. | பயனாளிகளை இனங்கண்டு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கழிவுத் தொட்டிகள் குறித்த பயனாளிகளுக்கு எதிர்காலத்தில் பகிர்ந்தளிக்கப்படும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### பயன்பாடற்ற/குறை பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2012 ஆம் ஆண்டு மாகாண நிலைபேறான அபிவிருத்தி மானியங்களின் கீழ் மெதரட உள்ளூராட்சி தகவல் தொழில்நுட்ப மேம்படுத்தல் வேலைத்திட்டம் - ஈ நென பியஸ திட்டத்தினை செயற்படுத்துவதற்காக ரூபா. 607,617 பெறுமதியான கணனிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதும், 2020 மே 12 ஆம் திகதி வரை அத் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஈ நென பியஸ உடனடியாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணனி மத்திய நிலையங்களை ஆரம்பிப்பதற்கு ஆளுனர் அவர்களின் அனுமதி கோரப்பட்டுள்ளது. |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு அச் செயறகளுக்கு மேலதிகமாக வேறு துறைகள் சார்ந்த பொறுப்புகள் வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக வருடத்தினுள் போதியளவு உள்ளகக் கணக்காய்வுகளை மேற்கொள்ள முடியாது போயிருந்ததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மாத்திரம் வழங்கப்படல் வேண்டும். | சமுதாய அமைப்புக்களை சபைகளை ஆரம்பித்தல் மற்றும் சொத்துக்கள் மெய்மையாய்வு ஆகிய பொறுப்புகள் மாத்திரம் அவருக்கு வழங்கப்பட்டிருந்ததென்பதை குறிப்பிடுகிறேன். |